## திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதிகளில்

# புதிய சமுதாய நலக் கூடங்கள்!

### அடிக்கல் நாட்டி - பணிகளை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தார்!



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (15.05.2025) திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட சமுத்திரம் காலனியில் நவீன சமுதாய கூடம் கட்டும் பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை, மே 17-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று முன்தினம் (15.05.2025) திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய சமுதாயம் கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்),மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை சார்பாக கனிம வளம் நிதி ஒதுக்கீடு நிதிதிட்டம் 2024-25ன் கீழ் தலா ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட மலப்பாம்பாடி, வேங்கிக்கால், அத்தியந்தல் மற்றும் சமுத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் புதிய சமுதாயம் கூடம் கட்டுவதற்காக நடைபெற்ற கால் கோள் விழாவில் சமுதாயம் கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு சமுதாய கூடங்களின் தரைதளம் 2664 சதுர அடியும்,முதல் தளம் 2664 சதுர அடி என மொத்தம் 5328 சதுர அடி பரப்பளவில் அமையவுள்ளது. மேலும் தரைத்தளத்தில் நுழைவுக் கூடம்,உணவுக்கூடம் (70 நபர்கள் அமரும் வகையில்),சமையல் அறை,வைப்பறை,பொது கழிப்பறை மற்றும் முதல் தளத்தில் மணமகன் அறை,மணமகள் அறை,திருமண கூடம் (180 நபர்கள் அமரும் வகையில்) உள்ளிட்ட வசதிகளுடன் சமுதாய கூடங்கள் கட்டப்படவுள்ளது.

தொடர்ந்து பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை மாநகராட்சி குட்பட்ட சமுத்திரம் காலனியில் ரூ. 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய கூடத்தின் கட்டுமான பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். புதியதாக கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய கூடம் கட்டடத்தில் தரைதளத்தில் நுழைவு கூடம்,வரவேற்பு அறை,அலுவலகம்,175 நபர்கள் அமரும் வகையில் உணவு கூடம், சமையல் அறை, வைப்பறை, சமையல் எரிவாயு அறை,பொது கழிப்பறை மற்றும் முதல் தளத்தில் 450 நபர்கள் அமரும் வகையில் மணமகன் அறை,மணமகள் அறை,திருமண கூடம்,மின் தூக்கி உள்ளிட்ட வசதிகள் குறித்தும்,மேலும் சமுதாய கூடம் கட்டிடத்தில் முன்பகுதி சுற்றுசுவர் அமைத்தல்,சுற்றிலும் அனுகுசாலை அமைத்தல்,வடக்கு பகுதியில் கால்வாய் வசதி ஏற்படுத்துதல், மின்தூக்கி அமைத்து தருதல்,சமையல் கூட பொருட்கள் வாங்குதல்,உணவு அருந்தும் கூடம் மேசை மற்றும் நாற்காலி வாங்குதல்,திருமண கூடம் இருக்கைகள் வாங்குதல் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு செய்தார்.

மேலும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம்,எடப்பாளையம் ஏரியில் பூங்கா அமைக்கும் பணிகள் பேவர் ப்ளாக் அமைக்கும் பணியினையும்,ஏரியில் மதகு அமைக்கும் பணி,ஏரியை சுற்றிலும் வேலி அமைத்தல் உள்ளிட்ட புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு,பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடிக்க துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி நிர்மலா வேல்மாறன், தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை மண்டலம், சே.மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர், பொதுப் பணித்துறை, திருவண்ணாமலை வட்டம், ம.பரிதி, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர், ராஜ்குமார், திருவண்ணா மலை வட்டாட்சியர் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, மே 17-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் கரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

வருகின்ற 19.05.2025 திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் அறந்தாங்கி கே.வி.எஸ் மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. கழக முதன்மை செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என். நேரு கழக வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்:

2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



"நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி போச்சம்பள்ளி ஒன்றிய திமுக சார்பாக ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி தலைமையில் அரசம்பட்டி கிராமத்தில் நடைபெற்றற பொதுக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர் அதியமான் ஆகியோர் கலந்து கொண்டு கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்களை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், நாகரசம்பட்டி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர் சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்

---



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 2 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 3 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

சென்னை வடகிழக்கு, தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" கழக சாதனைகளை விளக்கும் வகையில் துண்டு பிரசுரங்களாக பொதுமக்களிடம் நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி வழங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு நகர செயலாளர் தா.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..